டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 2.10.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 089 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய மத்திய அமைச்சர்

புது தில்லி, அக்.1

மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் ஒரு பகுதியாக புதுதில்லியில் நேற்று விவசாய அமைப்புகளின் உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தினார். விவசாயச் செலவைக் குறைப்பது, லாபகரமான விலை கொடுப்பது, நீர் தேங்குவதிலிருந்து பயிர்களை பாதுகாப்பது, பூச்சிக்கொல்லிகள் மற்றும் நல்ல விதைகள் கிடைப்பது, விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாப்பது போன்றவை குறித்து விவசாய அமைப்புகள் பல முக்கிய ஆலோசனைகளை வழங்கின.



பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களின் கட்டுப்பாடற்ற பயன்பாட்டால் மண்வளம் மோசமடைவதாகக் கூறிய விவசாயிகள் போதிய தகவல் இல்லாததால், பல நேரங்களில் விவசாயிகள் அரசின் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தனர். பயிர் காப்பீட்டுத் திட்டம் நல்ல திட்டம் என்று விவசாயிகள் பாராட்டினர். ஆனால் அனைத்து விவசாயிகளும் காப்பீடு பெற முடியவில்லை என்றும் கூறினர்.

டிரான்ஸ்பார்மர் எரிந்தால், பாசனம் பாதிக்கப்படாத வகையில், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மாற்ற வேண்டும் என்பது போன்ற பல நடைமுறை சிக்கல்களை விவசாயிகள் முன்வைத்தனர்.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் மாசுபட்ட நீர், இதன் காரணமாக பயிர்களுக்கான நீர் அல்லது நிலத்தடி நீர் கெட்டுப் போவது குறித்தும் விவசாயிகள் விவாதித்தனர். என்னைப் பொறுத்தவரை, இந்த விவாதம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது, ஏனென்றால் விவசாயிகளுக்கு சேவை செய்வது கடவுளை வணங்குவது போன்றது என்று சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்தார்.

விவசாயிகளின் பிரச்சினைகள் சிறியதாகத் தோன்றுகின்றன. இவை தீர்க்கப்பட்டால், விவசாயிகளின் வருவாய் 10 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கும் என்று மத்திய அமைச்சர் கூறினார்.

விவசாயிகளுக்கு போலி விதைகள் கிடைக்காத வகையில் சட்டத்தை மேலும் கடுமையாக்குவது போன்ற மத்திய அரசு தொடர்பான பிரச்சினைகளை அரசு பரிசீலிக்கும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசுகள் செய்ய வேண்டிய பல விசயங்கள் உள்ளன என்றும் அவற்றை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு அனுப்புவோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

விவாதத்திற்கு வந்து, மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கிய விவசாயிகளுக்கு நன்றி தெரிவித்தார். எங்களுக்கு கிடைத்த பரிந்துரைகளின் அடிப்படையில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவோம். மேலும் பிரச்சினைகளைத் தீர்க்க மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுவோம் என்றும் கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

கிருஷ்ணகிரி, அக்.1

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜான் லூர்து சேவியர் விடுத்துள்ள அறிக்கையில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் 2024-25ம் ஆண்டில் சம்பா நெல் பயிரில் எதிர்பாராமல் ஏற்படும் இயற்கை பேரிடர்கள், பூச்சி, நோய் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு பயிர் காப்பீடு செய்து பயனடைய அழைப்பு விடுத்துள்ளார்.

பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட சம்பா நெல் பயிருக்கு காப்பீடு செய்யப்பட்டு வருகிறது. சம்பா நெல் பயிருக்கு வரும் அக்டோபர் 31ம் தேதிக்குள் ஒரு ஏக்கருக்கு ரூ.556.50 பிரீமியம் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.




இத்திட்டத்தின் கீழ் கடன் பெறும் மற்றும் கடன் பெறா விவசாயிகள் பஜாஜ் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ, பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மையமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ தங்கள் பெயர்களை காப்பீடு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெற தங்களது ஆதார் எண், சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தக எண், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் போன்ற ஆவணங்களை இணைத்து உரிய பிரீமியம் தொகையை செலுத்தி இத்திட்டத்தில் பயன்பெறலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# போதுமான அளவு விதை நெல் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது




இராமநாதபுரம், அக்.1

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டார விவசாயிகளுக்கு திருப்புல்லாணி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் கூறியாதவது, மண்டபம் வட்டாரத்தில் உழவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் நெல் விதைக்க ஆரம்பித்துவிட்டார்கள். போதுமான அளவு விதை நெல் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு விதை நெல் விரிவாக்க மைய கிடங்கியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

திரவ உயிர் உரங்கள், இயற்கை பூஞ்சாண கொல்லிகளான சூடோமோனஸ், டி.விரிடி, ஜிங்க் சல்பேட் ஆகிய உரங்கள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மைய கிடங்கியின் இருப்பு உள்ளது. அனைத்து விவசாயிகளும் விதைப்புக்கு முன் விதை நேர்த்தி செய்வதனால் மண், நீர், காற்று, விதைகள் மூலம் பூஞ்சாண நோய் மற்றும் பாக்டீரியா நோய்கள் பரவுகின்றன. விதை நேர்த்தி செய்வதன் மூலம் பயிர்களை நோயில் இருந்து பாதுகாக்கலாம். விதையின் முளைப்புத் திறனை அதிகரிக்கிறது. ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் விதையுடன் தலா 50 மில்லி திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியாவை ஆறிய கஞ்சியில் கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும்.

மேலும் பூஞ்சாண கொல்லி விதைநேர்த்தி மண்ணின் மூலம் பரவக்கூடிய வேர் அழுகல், நாற்று அழுகல், வாடல் நோய், இலைவழி பரவும் குலைநோய் நோய் பாதிப்பை குறைப்பதில் சூடோமோனஸ் மற்றும் டி.விரிடி இவற்றின் பங்கு அதிகம். ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸ், 4 கிராம் டி.விரிடி இரண்டும் கலந்தோ தனித்தனியாக கலந்தோ விதை நேர்த்தி செய்யலாம். இவற்றை மற்ற பூச்சி மருந்துகளுடன் கலக்கக் கூடாது. உயிர் உரங்களுடன் கலந்து பயன்படுத்தலாம். மேலும் நெல்,சிறுதானியம், பயறு வகைப்பயிர்கள் மற்றும் எண்ணை வித்து பயிர்களுக்கான சாகுபடி தொழில்நுட்பங்கள் தொடர்பான அறிவுரைகள் தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 01.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 34 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 54 |
| 2 | வெண்டை | 28 | 32 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 42 | 46 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 28 | 32 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 42 | 46 | 60 | கேரட் | 50 | 54 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 40 | 45 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 44 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன்(L/G) | 26 | 30 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 16 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 26 | 30 | 66 | காலிபிளவர் | 54 | 58 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 50 | 130 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பட்டறை) | 45 | 58 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 30 | 73 | ஊட்டி அவரை | 120 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 42 | 46 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 60 | 68 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 120 | 125 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 45 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 0 | 0 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 25 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டிகவெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 45 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 38 | | | | |

# ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா

அரியலூர், அக்.1

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தடையில்லா வருமானம் தரக்கூடிய ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா சோழமாதேவியிலுள்ள கிரீடு வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகுகண்ணன் தலைமை வகித்தார். தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன் நிலையத்தின் செயல்பாடுகள், மண் ஆய்வு செய்து உரமிடுவதன் அவசியம் மற்றும் நன்மைகள், ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கினார்.

விவசாயிகள், விவசாயத்துடன் இணைந்து ஆண்டுதோறும் வருமானம் பெறுகின்ற வகையில் ஒருங்கிணைந்த பண்ணைய முறையை பின்பற்ற வேண்டும். விவசாயத்துடன் ஒன்றையொன்று சார்ந்த குறைந்த இடுபொருள் செலவில் கூடுதல் வருவாய் தரக்கூடிய கறவை மாடு வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு, புறக்கடை கோழி வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மரக்கன்றுகள் வளர்ப்பு, அசோலா தீவன உற்பத்தி, மண்புழு உரம் தயாரிப்பு போன்ற உப தொழில்களை மேற்கொண்டால் விவசாயம் மட்டுமின்றி பிற உப தொழில் களிலிருந்தும் தொடர் வருமானம் பெறலாம் என விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். வேளாண் பயிர்கள் சாகுபடியில் மஞ்சள் மற்றும் நீல வண்ண அட்டைகள் கொண்டு சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத் துவது, முட்டை ஒட்டுண்ணி அட்டை கொண்டு பூச்சிகளை அழிப்பது, இனக்கவர்ச்சிப் பொறி கொண்டு பூச்சிகளைக் கவர்ந்தழிப்பது போன்ற அங்கக முறை பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளை விளக்கினார். விவசாயிகள் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர உற்பத்தி திடல், நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ள பசுமைக் குடில், அசோலா தீவன வளர்ப்பு தொட்டி, காளான் வளர்ப்பு குடில், பரண்மேல் ஆடு வளர்ப்பு திடல், தோட்டக்கலை பயிர்களில் அடர் நடவு முறை, நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ள சாகுபடித் திடல், அங்ககப் பண்ணைய சாகுபடித் திடல், பண்ணைக்குட்டையில் மீன் வளர்க்கும் முறை மற்றும் பராமரிப்பு முறைகள், தேக்கு மரக்கன்றுகள் வளர்ப்புத்

திடல் ஆகியவற்றைப் பார்வையிட்டு தொழில் நுட்பங்களை தெரிந்து கொண்டனர். அங்கு விற்பனை செய்யப்பட்ட தேக்கு மற்றும் தென்னங்கன்றுகள், பழமரக் கன்றுகள், மண்புழு உரம் ஆகிய வற்றை வாங்கிச் சென்றனர்.

இக்கண்டுணர் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ஆரோக்கியராஜ், மகேஷ்குமார் ஆகியோர் செய்திருந்தனர். கலை ஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் கல்லாத்தூர் மற்றும் இடையார் கிராமங்களைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் இக்கண்டுணர் சுற்றுலாவில் கலந்து கொண்டு ஒருங் கிணைந்த பண்ணைய முறை குறித்து தெரிந்து கொண்டனர்.



# நெற் பயிரில் துத்தநாக சல்பேட் இட்டு மகசூல் இழப்பை தவிர்ப்பீர்!

சிவகங்கை, அக்.1

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுப.கமலா தேவி கூறியதாவது, நெற்பயிர் மண்ணில் உள்ள தழைச்சத்தை சரியாக உறிஞ்சி எடுக்கவும் அதன் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும் துத்தநாகசத்து மிகவும் அவசியமாகும். நெற்பயிரில் துத்தநாக சத்து மண்ணின் நீர் பிடிப்பு தன்மையை அதிகரிக்கச் செய்யும். மேலும் குறைந்த வெப்பநிலையை தாங்கும் தன்மையை பயிருக்கு அளிக்கும்.

மண்ணில் சுண்ணாம்பு தன்மை அதிகம் இருந்தால் துத்தநாக சத்து பயிருக்கு கிடைக்காத நிலை ஏற்படும். இதனால் பயிர் வளர்ச்சி குன்றி இலைகள் மஞ்சள் நிற கோடுகள் கொண்டதாக மாறி ஒளிச்சேர்க்கை நடப்பதை தடுக்கும். பின்பு பயிர்கள் காய்ந்து விடும், இதனால் விளைச்சலும் குறையும். இவற்றை நிவர்த்தி செய்ய ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ சிங் சல்பேட் அல்லது 5 கிலோ நெல் நுண்ணூரம் கடைசி உழவுக்குப் பின் 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு முறை இட வேண்டும்.

துத்தநாகசத்து பற்றாக்குறை அறிகுறிகள் அதிகமாக காணப்படுமாயின் ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் துத்தநாக சல்பேட்டை கலந்து கைத்தெளிப்பான் மூலம் நெற்பயிரின் இலைகளில் நன்குப்படும்படி தெளிக்க வேண்டும். துத்தநாக சல்ஃபேட் மற்றும் நெல் நுண்ணுயிரங்கள் 50 சதவீத மானியத்தில் தேவகோட்டை வட்டாரத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்கம் மையங்களில் கிடைக்கிறது. விவசாயிகள் வாங்கி பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.










பயோ நெமட்டான்

Stanes

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

பயன்படுத்துவீர்...

பயோ நெமட்டான்

"நூற்புழுக்களின் எதிரி"

இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938

# அங்கக வேளாண்மை குறித்த உள்மாநில அளவிலான விவசாயிகள் கண்டுனர்வு பயணம்



மதுரை, அக்.1

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2024-2025ம் ஆண்டு அங்கக வேளாண்மை குறித்த உள்மாநில அளவிலான விவசாயிகளுக்கு கண்டுனர் பயணம் செல்லப் பட்டது. வாடிப்பட்டி வட்டார வேளாண்மைத்துறை அலுவலர் மு.வசந்தகுமார் கொடியசைத்து பயணத்தை தொடங்கி வைத்தார்.

இப்பயணத்தில் அலங்காநல்லூர், திருமங்கலம், திருப்பரங் குன்றம், தெ.கல்லுப்பட்டி, சேடபட்டி வட்டாரங்களில் இருந்து 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு அரசு தோட்டக் கலைத் துறை சுற்றுச்சூழல் பூங்காவில் வாசைன திரவிய பயிர்கள் மற்றும் தோட்டக்லைப்பயிர்களில் அங்கக வேளாண்மை பயன்பாடுகள் குறித்து தோட்டக்கலை அலுவலர் வைத்தியலிங்கம் எடுத்துரைத்தார். மேலும் அங்கக முறையில் பயிரிடப்பட்டுள்ள தோட்டக்கலை பயிர்களை விவசாயிகள் பார்வையிட்டனர்.

மேலும் தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் உள்ள ஆர்விஎஸ் வேளாண்மை அறிவியல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் டாக்டர் சுகுமார், மண்புழு உரம் உற்பத்தி, தென்னை நார்க்கழிவு உரம் பயன்பாடு முறைகள், அங்கக முறையில் களைக் கட்டுப்பாடு, பஞ்சகாவ்யம், மீன் அமினோ அமில கரைசல், பசுந்தாள் உரப்பயிர்கள், இயற்கை பூச்சி விரட்டிகளான இஞ்சி பூண்டு கரைசல், தெர்மோமோர் கரைசல் மஞ்சள், வண்ண அட்டை, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ரைசோபியம் ஆகியவற்றினை பயன்படுத்தி இயற்கை முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்றிடலாம்

என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். விவசாயிகள் விற்பனை மற்றும் பயன்பாடு குறித்தும் பல்வேறு வகையான விளக்கங்களை கேட்டு அறிந்து கொண்டனர். இக்கணடனர்வு பயணத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.வேல்முருகன் பயிர்களுக்கு தேவையான பதினாறு வகை சத்துகள் குறித்தும் பஞ்சகாவ்யம், பயன்படுத்தும் முறைகள் பற்றியும் அட்மா திட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாடுளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சௌந்தராஜன், வசந்தி செய்திருந்தனர்.



# வடகிழக்கு பருவ மழை எப்படி இருக்கும்? கை கொடுக்குமா?

சில ஆண்டுகளாகவே, பருவமழை பருவம் தவறி பெய்கிறது அல்லது இயல்பான மழை பெய்வதில்லை. அதற்கு நேர்மாறாக அதிகமாக பெய்து விளைச்சலை கெடுக்கிறது. இந்த நிலைமைகள் தான் தற்போது நமது நாட்டிலே நிலவுகிறது. இதற்கு என்ன காரணம் என்றால் பலவிதமான காரணங்களை வானிலை ஆய்வாளர் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை மாறி மாதம் மும்மாரி மழை பெய்யும் காலம் வருமா? இந்த நிலைமை மாறுமா?

வறண்ட வானிலை, உயர்ந்த வெப்ப நிலை நிலவுவது வழக்கமான ஒன்று தான். என்றாலும் பொதுவாகவே 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை கூடுதலாக கடந்த 15-20 நாட்களாக பதிவாகி உள்ளது என்பதை நாம் தினசரி செய்தித்தாள் வாயிலாக அறிந்து வருகிறோம்.

இதற்கான காரணம் என்னவென்றால் தற்போதைய கால கட்டத்தில் சூரிய கதிர்கள் அதுவும் செங்குத்தாக, தலைக்கு மேலே வீழ்வதால், கூடுதலான வெப்பத்தை நாம் உணர் கிறோம்.

வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்யும் மானாவாரி பயிருக்கேற்ற மழையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திரா, கர்நாடக பகுதியில் வரலாறு காணாத அளவு மழை பெய்தது. விளைவாக காற்றில் ஈரப்பத்தை காற்றழுத்த தாழ்வு நிலை அள்ளிச் சென்றதால், நம் பகுதியில் வெப்பம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கின்றன.

தென்மேற்கு பருவ மழை எப்படி இருந்தது, கடந்த பருவத்திலே? தென்மேற்கு பருவ மழை தமிழகம் முழுக்க பரவலாக சாரசரியை விட 4% குறைந்திருக்கிறது. இன்னும் இம்மாத கடைசி வரை (SEPTEMBER) பருவ மழைக்கான காலம் உள்ளது. 10 மி.மீ முதல் 20 மி.மீ வரை பெய்யலாம். எல் நினோ பருவ நிலை மாற்றம் முடிந்து, 'லா நினோ வை நோக்கி நகர்கிறது.

எனவே வடகிழக்கு பருவமழை இயல்பான அளவு பெய்யும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எல் நினோ மற்றும் லா நினோ ஆகியவை ஸ்பானிய வார்த்தைகள் தான். இதுவும் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறாக இருக்கும். கடல் பரப்பு வெப்ப நிலையானது ஒரு குறிப்பிட்ட, காலத்திற்கு (7 முதல் 24 மாதங்கள் வரை) சாரசரி வெப்ப நிலையை விட, அதிகமாகும், நிகழ்வு 2க்கு மேற்பட்ட டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை அதிகரிக்கும். இந்நிகழ்வு சாரசரியாக 5 ஆண்டுகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சுவச்தா ஹை சேவா ‘Swacchta Hi Sewa‘



கடலூர், அக்.1

சுவச்தா ஹை சேவா ‘Swacchta Hi Sewa‘ என்னும் விழிப்புணர்வு இயக்கம் 15 செப்டம்பர் முதல் 2 அக்டோபர் வரை வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதில் 15 செப்டம்பர் அன்று தூய்மையை பற்றிய உறுதிமொழி அலுவலர்களால் எடுக்கப்பட்டது. மரங்கள் நடப்பட்டன, மணவாளநல்லூரில் கிராம பஞ்சாயத்து தலைவருடன் தூய்மை பற்றி கலந்து ஆலோசிக்கப் பட்டது. மங்கலம்பேட்டை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாரத் தான் ஓட்டமும், பல்வேறு போட்டிகளும் நடத்தப்பட்டு, மாணவர் களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பூங்காவின் தூய்மை உறுதி செய்யப்பட்டது. தூய்மையை நோக்கி ஒரு படி என்னும் மனித சங்கிலி நடத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பாணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையத்தில் குப்பைகள் கொட்டுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கோவில்களில் தூய் மையை பற்றிய விழிப்புணர்வு பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப் பட்டது. பின்னர் தூய்மை காப்பாளருடன் தூய்மையை பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. அவர்களுக்கு முகம் மற்றும் கை கவசம் வழங்கப்பட்டு மருத்துவ முகாம் நடைபெற்றது. இவர்களுக்கான பிரதம மந்திரி திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டது. இதன் மூலம் சுற்றுபுற கிராமங்களில் தூய்மையை பற்றிய விழிப்புணர்வு மிகப்பெரிய அளவில் ஏற்படுத்தப்பட்டது. அக்டோபர் 2 அன்று சுவச்சுதா திஸ்வாஸ் என்று கொண்டாப்பட உள்ளது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஸ்வச் பாரத் அபியான் திட்ட விழா



விருதுநகர், அக்.1

விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி வட்டாரத்திலுள்ள கத்தாளம்பட்டி கிராமத்தில் 30.9.24 அன்று, ரிலையன்ஸ் பவுண்டேசன் மற்றும் கே.வி.கே., அருப்புக்கோட்டை இணைந்து ஸ்வச் பாரத் (தூய்மை இந்தியா) விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி முன்னோடி விவசாயி பாக்கியராஜ் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு செப்.14 முதல் அக்டோபர் 2ஆம் தேதி வரை ‘ ஸ்வபவ் ஸ்வச்சதா சன்ஸ்கார் ஸ்வசச்சதா‘ என்ற கருப்பொருளை மையமாக வைத்து, தேசிய அளவிலான தூய்மை பணிக்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை இந்திய அரசு கடைப் பிடிக்கிறது என்பது நாம் அறிந்தே. இதன் மூலமாக தூய்மையான மற்றும் பசுமையான சூழலுக்கு மக்கள் பங்களிப்பு செய்வதை உறுதிப்படுத்துகிறது.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

இந்த நிகழ்வில் வரவேற்புரை ஆற்றி திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா,பேசுகையில், ஸ்வச் பாரத் அபியான் திட்டமானது கடந்த 2014 யில் அக்டோபர் 2ஆம் தேதி தொடங்க பட்டு இன்று பத்து ஆண்டுகள் முழுமையாக முடிவடைந்த நிலையில் உள்ளது. ஓவ்வொரு வரும் தங்களது வீடுகளையும், சுற்றுப்புற தெருக்களும் தூய்மையாக வைத்திருந்தால் நகரமும் நாடும் தூய்மையாக இருக்கும். இன்று காற்றில் அதிகமாக மாசு ஏற்படுவதை தடுக்க மரங்களை வளர்க்க கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்த கொண்ட கே.வி.கே சுற்றுச்சூழல் போராசிரியர் கண்ணன் மற்றும் உணவு அறிவியல் இணை பேராசிரியர் நல்ல குரும்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, கூறுகையில், வேளாண்மை கழிவுகள் களைச்செடிகள் போன்ற வற்றை எருக்குழியில் இட்டு, சாணக்கரைசலை தெளித்து, அதற்குபின் TNAU WASTE MINILIZER கரைசலை தெளித்து, மணலை மேலே முடி கிளறி விடவும்.

1–2 மாதங்களில் மக்கிவிடும். நன்றாக பிரவுன் கலரில் மாறி மழை பெய்தால் அதில் ஒருவித வாடை வரும் என்றார். இவ்வாறாக செய்தால் அதிகமாக இரசாயன உரங்கள் பயன்பாட்டை குறைக்க முடியும் என்று கூறி செயல்விளக்கமாக செய்தனர். இதுமட்டு மல்லாது வேஸ்ட் டிகம்போஸரையும் பயன்படுத்தலாம் என்றார். தேவைப் படுவோர் ஆன்லைன் மூலம் இதனை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் பேசுகையில் வேளாண் கழிவுகளை தீயிட்டு எரிக்காமல் அவற்றை மடக்கி ரோட்டோவேட்டர் மூலமாக உழுது மக்கச்செய்தால் மண்வளமும், வருமானமும் பெருகும் என்றார். தென்னை மட்டை, வாழை மட்டைகள் போன்ற வற்றை தூளாக மாற்றி மண்ணில் கலக்கலாம் என்றார். ஒன்றின் கழிவு மற்றொன்றின் உணவாக மாறும். எனவே கழிவுகளை தீயிட்டு எரிக்கக்கூடாது. இதனால் காற்று மாசு ஏற்படுவதை தடுக்க முடியும். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வேளாண்மை உதவி அலுவலர் நாகராஜ் பேசுகையில், நடப்பாண்டில் செயல்படுத்தப் படும் வேளாண் மானியத் திட்டங்களை எடுத்துக்கூறினார். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், மகளிர்கள், மாண வர்கள் கூட்டாக தூய்மை பாரத உறுதி மொழியை எடுத்துக் கொண் டனர். கிட்டத்தட்ட தெருக்களில் குப்பை கழிவு களையில் மக்கக் கூடியது, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரித்தனர்.

இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகளை கள பணியாளர் வேம்புலு சிறப்பாக செய்திருந்தார்.



# உள் மாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணம்

சிவகங்கை, அக்.1

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் இருந்து விவசாயிகள் சுமார் 50 பேர் பயறுவகை பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பயறு வகை பயிர்கள் உற்பத்தி தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்வதற்காக கண்டுணர்வு பயணமாக புதுக்கோட்டையில் உள்ள வம்பன் பயறுவகை பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்றோம். கடந்த காலங்களில் சிவகங்கை மாவட்ட விவசாயிகள் நெல், கரும்பு போன்றவை அதிகளவில் சாகுபடி செய்து கொண்டிருந்தனர். தற்பொழுது ஒரு சில பகுதிகளில் நெல் தரிசில் உளுந்து சாகுபடி மற்றும் வரப்பில் உளுந்து சாகுபடி செய்து வருகின்றனர். எனவே மேலும் பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இந்த கண்டுணர்வு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

வம்பன் பயறுவகை பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர், ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்ட இரகங்கள் மற்றும் சிறப்பு தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்து கூறினார். ராமகிருஷ்ணன், உதவி பேராசிரியர் வயல்வெளி ஆய்வு மூலம் அதிக அளவு புரோட்டீன் சத்து தரக்கூடிய உளுந்து பயிர் சாகுபடி செய்யுமாறு வலியுறுத்தினார். குறைந்த செலவில் அதிக மகசூல் தரக்கூடிய உளுந்து பயிர் சாகுபடி செய்து விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளுமாறு எடுத்து கூறினார். வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் உதவி பேராசிரியர் மேனகா, ஆராய்ச்சி மையத்திலிருந்து வெளியிடப்பட்ட இரகங்களின் குணாதிசயங்கள், பட்டத்துக்கு ஏற்ற இரகங்கள் தேர்வு, விதைபண்ணை அமைப்பதற்கான வழிமுறைகள் பற்றி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்து கூறினார். பாசிப்பயறு, உளுந்து போன்ற பயறு வகை பயிர்களின் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் அதற்கான கட்டுப்பாடு முறைகள் மகசூல் அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகள் தெரிந்து கொண்டு வந்தனர். இந்த கண்டுணர்வு பயணத்தை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் சண்முகபிரியா ஆகியோர் ஏற்பாடு செய்து விவசாயிகளை அழைத்து சென்று வந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# "யார் இந்த தமிழ்மறவன்?"

மரங்கள் சூழ்ந்த பரம்பு மலையில் மரத்துக்கு ஒன்றென யானை கட்டி போர் பலம் பொருந்திய பாரியும், முறுக்கு மீசைக்காரார், ஆங்கிலேயனை எதிர்த்த மண்ணின் பாசக்கார ராம் கட்டபொம்மனும், தன்மேனி முழுக்க எண்ணெய் பூசி, ஆங்கிலேயனின் ஆயுதக் கிடங்கில் குதித்து தன் நாட்டை காத்த, வீரமங்கை வேலுநாச்சியாரின் பெண்கள் படைத் தளபதியுமான குயிலியும்,

'பிணக்குவியலிலே பெருமூச்சு வாங்க நடந்தாள்
மனம்பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை
மகன் பிறந்த போதும் அவள் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு
அவன் இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்புகாட்டி!
இதை கண்டாள் – இதயங்குளிர்ந்தாள்'
என்ற புறநானூற்று தாயும் வாழ்ந்த நாடு தான் நம் தமிழ்நாடு.

ஏனப்பா இதெல்லாம் சொல்லுற? யாரு தான் அந்தத் தமிழ் மறவன் என்பது தானே கேள்வி?

நம் நாட்டின் மாநில பட்டாம் பூச்சி தான் 'தமிழ்மறவன்'



**உயிரியல் வகைப்பாடு**

| | |
|---|---|
| திணை | : விலங்கு |
| பிரிவு | : கணுக்காலி |
| வகுப்பு | : பூச்சி |
| வரிசை | : லெப்பிடாப்பிடிரா |
| குடும்பம் | : நிம்ப்பாலிடே |
| பேரினம் | : சிரோகோரா |
| இனம் | : தாயிசு |
| ஆங்கிலப் பெயர் | : தமிழ்யேமோன் |

தமிழ்நாட்டின் உள்ள இனமாகிய மலைச்சிறகன்களின் ஆங்கில பொதுப் பெயரில் தமிழ் என்று வருவதாலும், மறத்தைப் போற்றிய தமிழர் பண்பாட்டை அடையாளங் காட்டுவதாலும் இவ்வினத்தை மாநிலப் பட்டாம் பூச்சியாக தேர்ந்தெடுத்தனர். மகாராட்டிரம், உத்தரகாண்டம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கலைத் தொடர்ந்து இந்தியாவில் மாநிலப் பட்டாம் பூச்சியைத் தேர்ந்தெடுத்த ஐந்தாவது மாநிலம் தமிழகம்.



முட்டை



லார்வா



கூட்டுப் புழு



வண்ணத்துப் பூச்சி

வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி

**தோற்றம் :** அகலம்– 60 மி முதல் 75 மி வரை.

மஞ்சள் நிறம் கொண்ட மறவனின் இறக்கைகளின் மேற்புற நுனிகளில் கருப்புத் திட்டுகளும் அலை அலையாய் கோடுகளும் இருக்கும். இறக்கையின் மேல் நுனியில் வெள்ளைப் புள்ளி களையும், கீழ் நுனியில் நரம்புகளுக்கு இடையே கரும்புள்ளிகளும் காணலாம்.

**பரம்பல் :** மேற்குத் தொடர்ச்சி மலைகளிலுள்ள பசுமை மாறாக் காடுகளிலும் மலையடி வாரங்களிலும் மட்டுமே வாழும் அரிய வகை பட்டாம்பூச்சிகள். இவை நீலகிரியில் முதுமலை புலிகள் காப்பகத் திலும், குன்னூர், கூடலூர் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

**சூழியல் :** ஈரப்பதமான இடங்களில் ஆண்டு முழுவதும் காணப் பட்டாலும் பிப்ரவரி முதல் மே மாதம் வரையிலான காலத்திலும் மழைக்குப் பின்னரும் அதிகமாக காணப்படுகின்றன.

**நடத்தை** : தமிழ் மறவன் விரைவாகவும், நேராகத் திறனுடனும் பறப்பவை. அவற்றின் விரைவை முன்னிட்டே இவை மறவன்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் புழுக்கள் மரவெட்டி இலைகளை தின்கின்றன.

இறுதியாக மறத்தமிழர்களின் மாநிலப் பட்டாம் பூச்சி‘தமிழ் மறவன்‘ என்பதை மறவாமல் நினைவில் நிறுத்தி. இவ்வினத் தினை காத்து, அறியாததை அறிவோம்! அறிவிப்போம் வாரீர்.

கட்டுரையாளர்கள் : **டிரின்னிகிறிஸ்டினா.கி (மூன்றாம் ஆண்டு), முனைவர் செ.பழனிவேல், உதவி பேராசிரியர், பூச்சியியல் துறை, இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, துறையூர், திருச்சி–621 206.**

# அங்கக முறையில் பயிர்களுக்கு ஊட்டச்சத்துக்களை வழக்குவதில் பயிர் சுழற்சி, ஊடுபயிர் மற்றும் நவதானியம் பயிரிடுதலின் முக்கியத்துவம்!

அங்க முறையில் பயிர்களுக்கு தேவையான ஊட்டச் சத்துக்களை பயிர் சுழற்சி, ஊடுபயிர் மற்றும் நவதானியம் பயிரிடுதலின் மூலம் அளிப்பது மிகவும் முக்கியமானதாகும்.



## பயிர் சுழற்சி மற்றும் ஊடுபயிர் பயிரிடுதல்

ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மண்வள மேம்பாட்டிற்குப் பயிர் சுழற்சி மற்றும் ஊடுபயிர்கள் முக்கியக் காரணிகளாக விளங்குகின்றன. பயிர் சுழற்சி என்பது ஒரு விவசாய நிலத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வெறு விதமமான பயிர்களை ஒரே நிலத்தில் தொடர்ந்து பயிரிடுவது ஆகும்.

உதாரணமாகத் தானியங்கள் அல்லது கோதுமைக்கும் பிறகு பயறு வகைப் பயிர்களைப் பயிரிடுவதால் காற்றில் உள்ள தழைச்சத்தினை மண்ணில் நிலைநிறுத்தி அடுத்து வரும் பயிருக்கு உதவும்.

இதேபோன்று முதன்மை பயிருக்கு இடையே வெவ்வேறு வகையான பல்முக பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடும் பொழுது இவை வெவ்வேறு வேர் ஆழங்களைக் கொண்டிருப்பதால் மண்ணில் ஊ ட்டச்சத்துக்களின் சுழற்சிக்கும். அவற்றைத் திறம்பட பயிர் எடுத்துக் கொள்ளவம் ஒன்றுக்கொன்று உதவி புரிகின்றன.

## நவதானியப் பயிரிடல்

இரண்டு முதன்மை பயிருக்கு இடைப்பட்ட காலத்தில் அல்லது கோடையின் இறுதியில் பல்வகைப் பயிர்களை விதைத்து, பூக்கும் பருவத்தில் மடக்கி உழுவதால் மண்ணின் வளம் பெருகுவதோடு பயிர்களுக்கு ஊட்டச்சத்துக்கள் எளிதில் கிடைக்க வழிவகை செய்யும்.

பொதுவாகத் தானியங்களில் இரண்டு வகை. எண்ணெய் வித்துக்களில் இரண்டு வகை பயறு வகைகளில் இரண்டு வகை மற்றும் ஒரு பசுந்தாள் வகை என ஒவ்வொன்றும் ஒரு கிலோ வீதம் மூலம் ஓர் ஏக்கருக்குப் போதுமான ஊட்டச்சத்துகளைச் சேர்க்க முடியும்.

எள், சோளம், ஆமணக்கு, தட்டைப்பயறு, அகத்தி கொள்ளு, கொளிஞ்சி, கேழ்வரகு உளுந்து, கடலை, சூரியகாந்தி, பச்சைப்பயறு, தினை, பனிவரகு, சாமை மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களில் ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்களை தேர்வு செய்து பயிரிட்டு அவற்றை மடக்கி உழுது ஊட்டச் சத்துக்களை பெற்று பயன்பெறலாம் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மணப்பாறையில் அங்கக வேளாண்மை குறித்த வெளிமாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணம்



திருச்சி, அக்.1

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் கீழ் 2024-25 ஆம் ஆண்டு அங்கக வேளாண்மை குறித்த வெளிமாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணமானது கர்நாடகா மாநிலம், மைசூர் மாவட்டம், மாண்டியாவில் உள்ள மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலையம், அங்கக வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் காந்தி கிசான் விக்யான் கேந்திரா ஆகிய இடங்களில் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விவசாயிகள் கண்டணர்வு பயணத்தில் தொப்பம்பட்டி, வடுகப்பட்டி, மு.பெரியப் பட்டி, பொய்கைப்பட்டி, பண்ணப்பட்டி, கருப்பூர் மற்றும் சூளியாப் பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த 20 விவசாயிகள் பயணத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் மணப்பாறை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மோகனா கொடி அசைத்து துவக்கி வகித்தார்.

கர்நாடகா மாநிலம், மைசூர் மாவட்டம், மாண்டியாவில் உள்ள மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள முனைவர் நன்டேஷ், அங்கக வேளாண்மை பற்றியும் அதன் வழிமுறைகள் பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக அறிமுகபடுத்திய மக்காச்சோள விதை பற்றியும் அதனின் பயன்கள் பற்றியும் கூறினார். பின்னர் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தில் பயன்படுத்தும் இயந்திரம் அதன் பயன்கள் தானிய கிடங்கு மற்றும் தானியங்களை பற்றி கூறினார். மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலைய கட்டுப்பாட்டில் உள்ள வெல்லம் உற்பத்தி ஆலைகளை சுற்றி காட்டினார். மாண்டியாவில் உள்ள காந்தி கிசான் விக்யான் கேந்திராவில் உள்ள முனைவர் ரேக்கா, அங்கக வேளாண்மை பற்றியும் அதன் வழிமுறைகள் பற்றியும் அங்கக வேளாண்மை சான்று பெறும் முறைகளை பற்றியும் விரிவாக விளக்கி கூறினார். அங்கக வேளாண்மையில் பின்பற்ற வேண்டிய முறைகள் இயற்கை முறையில் உற்பத்தி செய்யும் பஞ்சகாவியா, மீன் கரைசல், அமுத கரைசல் மற்றும் அரைப்பு மோர் கரைசல் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றியும் அவற்றை பயன்படுத்தும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர்.

நாகனஹள்ளியில் அங்கக வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள முனைவர் ஆஸ்வினி, அங்கக முறையில் உற்பத்தி செய்யும் வேளாண்மை பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களை விவசாயிகள் இடம் வயல் வழியாக காண்பிக்கப்பட்டது.

ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள ஒருங்கிணைந்த பண்ணையம், மண் புழு உற்பத்தி செய்யும் முறைகள், தேனீ வளர்ப்பு மற்றும் உயிர் செரிமான அலகு பற்றி விரிவாக விளக்கி கூறினார். இயற்கை முறையில் களைகளை கட்டுப்படுத்தும் முறைகளையும் அதற்கான இயற்கை களைக்கொல்லிகள் தயாரிப்பு முறைகள் பற்றியும் விளக்கினார்.

பட்டறிவு பயணத்தின் இறுதியில் தொழில்நுட்ப செயல் விளக்கம் அளித்த அனைத்து பேராசிரியர்களுக்கு மணப்பாறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்தியசீலன் நன்றி கூறினார். இப்பயணத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரியங்கா செய்திருத்தார்.



# கருப்பூர் பஞ்சாயத்தில் விவசாயிகளுக்கு மானியத்தில் உளுந்து விதை விநியோகம்



தஞ்சாவூர், அக்.1

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் வட்டாரத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தில் உளுந்து போன்ற பயறு வகை பயிர்களுக்கு கிலோவுக்கு ரூ.50 மானியத்தில் சான்று விதை விநியோகத்தின் கீழ் 45 விவசாயிகளுக்கு கருப்பூர் பஞ்சாயத்தில் வழங்கப்பட்டது. மேலும் 15 விவசாயி களுக்கு நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் தெளிப்பு நீர் பாசன கருவி 100 சத மானியத்தில் தேவைப்படும் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டனர். தரிசு நிலத்தை சாகுபடிக்கு கொண்டு வரும் இரண்டு விவசாயிகளின் ஆவணங்கள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட பஞ்சாயத்து ஆக கருப்பூர் இவ்வருடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்கண்டவாறு சிறப்பு கூட்டம் கருப்பூர் ஊராட்சி மன்ற தலைவர் கனகாம்புஜம் மூலம் கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வேளாண் துறை திட்டங்கள் குறித்து ஒலி பெருக்கி மூலம் தெரிவிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு திட்டங்களின் கீழ் விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்யப் பட்டனர். வேளாண் உதவி இயக்குனர் திலகவதி வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். வேளாண் உதவி அலுவலர் ராமு பல்வேறு வேளாண் துறை திட்டங்களின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளை பதிவு செய்தார். ஊராட்சி மன்ற தலைவர் கனகாம்புஜம் விவசாயிகளுக்கு மானியத்தில் உளுந்து விதைகளை வழங்கினார்.சிரமேல் குடி கிடங்கு மேலாளர் முருக லட்சுமி மற்றும் சிசி அலுவலர் ரம்யா நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர். வேளாண் உதவி இயக்குனர் திலகவதி அனைவருக்கும் நன்றி கூறினார்